**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**STC.NO- 155/2024**

**Dated :18.03.2026**

**Deposition of witness for : D.W.1**

**Chief Examination of DW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ் இனியன் | வயது | : | 33 |
| தந்தை பெயர் | : | தனசேகரன் | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | இணை கிளை மேலாளர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து புதுக்கோட்டை கீழ ராஜ வீதியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கிக் கிளையில் இணை கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்கள் வங்கிக்கிளையில், சிராஜூதீன் மற்றும் நூர்ஜஹான் ஆகியோருக்கு வங்கி கணக்கு எண் 10909741171 என்ற கூட்டு வங்கிக்கணக்கு உள்ளது. மேற்படி வங்கிக்கணக்கின் 01.02.2024 தேதி முதல் 29.02.2024 தேதி வரையிலான வங்கிக்கணக்கு அறிக்கையினை தாக்கல் செய்கிறேன். **(மேற்படி வங்கிக்கணக்கின் 01.02.2024 தேதி முதல் 29.02.2024 தேதி வரையிலான வங்கிக்கணக்கு அறிக்கை சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி வங்கிக்கணக்கில் CTS மூலமாக சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட காசோலை எண் 350393 என்ற காசோலையின் ஸ்கேன் செய்யப்பட்ட Image தாக்கல் செய்கிறேன். **(மேற்படி காசோலையின் ஸ்கேன் செய்யப்பட்ட Image உண்மை நகல் சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** மேற்படி காசோலை வங்கிக்கணக்கில் Exceeds Arrangement என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதற்கான அறிக்கை **( மேற்படி**

**காசோலை வங்கிக்கணக்கில் Exceeds Arrangement என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதற்கான அறிக்கை கணினி பதிவிறக்க உண்மை நகல் சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2) காசோலை வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்ட போது, மேற்படி வங்கிக்கணக்கில் ரூ.1,50,362.59/- தொகை இருந்தது. காசோலை ரூ.5,00,000/-க்கு தாக்கல் செய்யப்பட்டது. காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து எத்தனை நாள்களில் காசோலைக்கு தொகை வழங்கப்படுவது குறித்து தெரிவிக்கப்படும் என்றால் காசோலை வங்கியால் CTS மூலமாக செலுத்தப்பட்ட அன்றோ, மறுநாளோ தெரிவிக்கப்படும். வழக்கு காசோலை எப்போது வசூக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும் எந்த தேதியில் திருப்பப்பட்டது என்றும் சொல்லமுடியுமா என்றால் 12.02.2024 ஆம் தேதி திருப்பப்பட்டது. வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்ட தேதியை காசோலை தாக்கல் செய்யப்பட்ட வங்கி தான் சொல்லமுடியும்.

**( கூட்டு வங்கிக்கணக்கில் உள்ள இரு நபர்களில் காசோலையில் கையொப்பமிட்டது யார் என்பது குறித்த ஆவணத்தை தாக்கல் செய்வதற்காக சாட்சியின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.18 17:36:02 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**